பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 05 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவிற்கும் - சைப்ரஸுக்கும் இடையேயான உறவு பொற்காலத்தில் நுழைந்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. இளையோரிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவது, கவலையளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் போதிய அளவு கையிருப்பு உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவிற்கும் - சைப்ரஸுக்கும் இடையேயான உறவு பொற்காலத்தில் நுழைந்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நேற்று சைப்ரஸ் அதிபர் நிகோஸ் கிறிஸ்டோடோலிடிஸ் மற்றும் அந்நாட்டு தூதுக்குழுவினரை வரவேற்று பேசுகையில் இதனை குறிப்பிட்ட அவர், இந்தியாவும் - சைப்ரஸும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் மிக நெருங்கிய உறவைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தற்போது இருதரப்பு உறவு 'உத்திசார் கூட்டாண்மை' என்ற அடுத்த கட்டத்திற்கு உயர்ந்துள்ளதாகவும், இது இரு நாடுகளுக்கு இடையே வளர்ந்து வரும் ஆழமான நம்பிக்கையைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, தொழில்நுட்பம், நிதிச் சேவைகள் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு போன்ற முக்கிய துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதன் மூலம், இந்த உறவு ஒரு புதிய கட்டத்தில் நுழைந்துள்ளதாக திருமதி முர்மு மகிழ்ச்சி தெரிவித்தார்.

<<<<>>>>

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று இந்தியாவும்-சைப்ரசும் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

புதுதில்லி வந்துள்ள சைப்ரஸ் அதிபர் **Nikos Chiristodoulides** - பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற பேச்சுகளுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்த அவர்கள், ஐ.நா. சபையால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை கூட்டாக எடுப்பது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளனர்.

பயங்கரவாதிகளுக்கு நிதி கிடைப்பதை தடுப்பது, இணையதளம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை தவறாக பயன்படுத்துவதை கண்காணிப்பது போன்ற விஷயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட முடிவெடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இளையோரிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவது கவலையளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நூலக மனிதர் என்று போற்றப்படும் P.N. பணிக்கரின் கதை என்ற புத்தகத்தை நேற்று புதுதில்லியில் வெளியிட்டு பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

மின் புத்தகங்கள், டிஜிட்டல் ஆவண காப்பகங்கள், இணையதளங்கள் வாயிலாக நூலகங்கள் டிஜிட்டல் யுகத்தில் நுழைந்துள்ள நிலையில் இளைஞர்கள் கைப்பேசிகள் மற்றும் சமூக ஊடகங்களில் மூழ்கியிருப்பது கவலையளிப்பதாக கூறினார்.

இதன் காரணமாக இளைஞர்களிடையே ஆழமாக சிந்தித்துப் படிக்கும் பழக்கம் மறைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாசிப்பை நிறுத்தும் சமூகம் சிந்திக்கும் திறனையும், படைப்பாற்றலையும் இழந்துவிடும் என்றும் திரு. ராதாகிருஷ்ணன் எச்சரித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் போதிய அளவு கையிருப்பு உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

எரிபொருள் வினியோகம் சீராக நடைபெற்று வருவதால் பொதுமக்கள் யாரும் தேவையின்றி எரிபொருளை மொத்தமாக வாங்கி சேமிக்க வேண்டாம் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

அனைவருக்கும் தங்குதடையின்றி எரிபொருள் கிடைப்பதை அரசு உறுதி செய்துள்ளதாகவும் சமூக வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பெட்ரோல் நிலையங்களில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு சரி செய்யப்பட்டு வருவதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று கொல்கத்தா வருகிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சராக அவர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

கொல்கத்தா பயணத்தின் போது, அன்னை தெரசாவின் நினைவிடத்திற்குச் சென்று அவர் அஞ்சலி செலுத்தவுள்ளார்.

தொடர்ந்து, விக்டோரியா நினைவிடத்தையும் அவர் பார்வையிட உள்ளார்.

இதன் பின்னர், புதுடெல்லி வரும் திரு. மார்கோ ரூபியோ, பிரதமர் திரு. நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுகிறார்.

நாளை புதுதில்லியில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

அமெரிக்க தூதரகம் சார்பில் நடைபெறும் சுதந்திர தின கொண்டாட்டங்களிலும் அவர் பங்கேற்கிறார்.

வரும் திங்கட்கிழமை ஆக்ரா மற்றும் ஜெய்ப்பூர் நகரங்களுக்கு செல்லும் திரு. மார்கோ ரூபியோ, செவ்வாய்க்கிழமை புதுடெல்லியில் நடைபெறும் QUAD நாடுகள் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

<<<<>>>>

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், அமெரிக்காவின் முதலீட்டு நிறுவனக் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் திரு. மேத்யூ மோலன்காம்பை நேற்று புதுதில்லியில் சந்தித்துப் பேசினார்.

வேகமாக வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இந்த சந்திப்பின்போது ஆலோசிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உற்பத்தி, கண்டுபிடிப்புகள் மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் அதே வேளையில், தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு, மின்னணுவியல் மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பு உள்ளிட்ட வேகமாக வளர்ந்து வரும் துறைகளில், அமெரிக்க முதலீடுகளை வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக சமூக வலைதளத்தில் திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் குன்னூரில் மலைப்பயிர்கள் கண்காட்சி நேற்று தொடங்கியது.

நாளை வரை நடைபெற உள்ள இந்த கண்காட்சியில் தேயிலை, காப்பி, முந்திரி போன்ற மலைப் பயிர்களைக்கொண்டு பல்வேறு வகையான கண்கவர் அலங்கார வடிவங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 48 Sec)**

<<<<>>>>

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படைப் பிரிவில் பணியாற்றி வரும் இந்திய ராணுவ அதிகாரி மேஜர் அபிலாஷா பராக், 2025-ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற 'ஐநா ராணுவ பாலினப் பாதுகாவலர்' விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேஜர் அபிலாஷா பராக், தற்போது லெபனானில் உள்ள ஐநா இடைக்காலப் படையின் இந்தியப் பிரிவில், மகளிர் குழுவின் தளபதியாகப் பணியாற்றி வருகிறார்.

இவர் இந்திய ராணுவத்தின் முதல் பெண் ஹெலிகாப்டர் பைலட் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

அமெரிக்க உளவுத்துறை இயக்குநர் திருமதி துளசி கப்பார்ட், தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

தமது கணவர் திரு. ஆபிரகாம் வில்லியம்சுக்கு மிகவும் அரிதான வகை எலும்புப் புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதை அடுத்து, வரும் ஜூன் மாதம் 30-ஆம் தேதி முதல் அவர் பதவியிலிருந்து விலகுகிறார்.

அமெரிக்க அதிபர் திரு. திரு. டோனல்ட் ட்ரம்ப்பிற்கு தனது ராஜினாமா கடிதத்தை அவர் அனுப்பியுள்ளார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் மற்றும் விதர்பா ஆகிய பகுதிகளில் இன்று கடுமையான வெப்ப அலை வீசக்கூடும் என்பதால் வானிலை ஆய்வு மையம் 'சிவப்பு எச்சரிக்கை' விடுத்துள்ளது.

டெல்லி, பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், பீகார், சத்தீஸ்கர், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு வெப்ப அலை வீசக்கூடும் என்பதால் 'ஆரஞ்சு எச்சரிக்கை' விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் இன்று வெப்பம் அதிகரித்து காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, அருணாச்சலப்பிரதேசம், அசாம், மேகலாயா, மேற்குவங்கத்தின் இமயமலை ஒட்டிய பகுதிகள் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் நாளை வரை மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இரவு மணி 7.30க்கு லக்னோவில் தொடங்குகிறது.

முன்னதாக நேற்று ஹைதராபாதில் நடைபெற்ற போட்டியில் ஹைதராபாத் அணி 55 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 255 ரன் எடுத்தது.

256 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி, 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 200 ரன் மட்டுமே எடுத்தது.

**<<<<The End>>>>**